**OS No.118/2018**

DW 1 – நல்லதம்பி

நாள் 01.07.2025

**பி.வா.சா.1 அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு அவரை வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி செய்யப்படுகிறார்.**

செட்டில்மெண்ட காலத்தில் என் அப்பாவின் பெயரில் உள்ள பட்டாவை மோசடியாக பிச்சு அய்யர் என்பவரின் மனைவி லெட்சுமி அம்மாள் என்பவரின் பெயரில் பட்டா மாறுதல் செய்யப்பட்டது குறித்து ஆட்சேபணை செய்து வருவாய்துறையில் ஏதும் புகார் கொடுத்துள்ளேனா என்று கேட்டால் என் தகப்பனார் புகார் கொடுத்து நடவடிக்கை எடுத்துள்ளார். மேற்படி என் அப்பா கொடுத்த புகாரை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்று கேட்டால் தாக்கல் செய்யவில்லை. பிச்சு அய்யர் என்பவரின் மனைவி லெட்சுமி அம்மாள் என்பவர் மானாமதுரை டி.மு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 138/1996 என்ற வழக்கை நடத்தி வந்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் குறிப்பிட்டுள்ளேன்.

மேற்படி அசல் வழக்கு எண் 138/1996 ல் பிறப்பித்த தீர்ப்புரையை நான் நீதிமன்றத்தில் ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன். மேற்படி அந்த தீர்ப்புரையில் லெட்சுமிஅம்மாள் என்பவர் நேரடியாக சாட்சியம் அளிக்கவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது பற்றி தெரியுமா என்றால் தெரியும். மேற்படி அந்த அசல் வழக்கு எங்களால் தாக்கல் செய்யப்பட்டு இறந்து போன லெட்சுமிஅம்மாள் பெயரில் மோசடியாக எதிர் வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு தீர்ப்புரை பெறப்பட்டது என்றால் சரியல்ல.

( **வாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது**. )

-Sd-

*Taken down by me in open court readover/interpreted to the witness in Tamil and acknowledged by him/her to be correct.*

*-Sd-*
*District Munsif,*
*Manamadurai.*